**செய்தி வெளியீடு எண்: 857** **நாள்: 01.12.2019**

**செய்தி வெளியீடு**

**அனைத்து நாடுகள் மாற்றுத் திறனாளிகள் தினம் – 2019**

**1.12.2019** அன்று அண்ணா பல்கலை கழகத்தில் அனைத்து நாடுகள் மாற்றுத்திறனாளிகள் தினம் 2019 மாற்றுத்திறனாளிகளுக்கான மாநில அளவிலான விளையாட்டுப் போட்டி மற்றும் கலை நிகழ்ச்சிகளில் பங்கு கொண்டு சிறப்பித்தவர்களுக்கு மாண்புமிகு சமூக நலம் மற்றும் சத்துணவு திட்டத்துறை அமைச்சர் டாக்டர். V. சரோஜா M.D., D.G.O., அவர்கள் பாராட்டி வாழ்த்தி பரிசுகள் வழங்கினார்கள். மாற்றுத்திறனாளிகள் நலத்துறை அரசு செயலாளர் திரு.C.விஜயராஜ்குமார், இ.ஆ.ப., மாற்றுத்திறனாளிகள் நல ஆணையர்/ மாற்றுத்திறனாளிகள் நல இயக்குநர் திரு. ஜானி டாம் வர்கீஸ், இ.ஆ.ப., மற்றும் துறையின் உயர் அலுவலர்கள் கலந்து கொண்டார்கள்.

**01.12.2019** அன்று இரவு, மாற்றுத்திறனாளிகள் நலத்துறையின் அரசு செயலாளர் மற்றும் ஆணையருடன் பணியாளர்கள், மாற்றுத்திறனாளி மாணவர்கள் தங்கும் இடத்திற்கு சென்று மாணவர்களுடன் சேர்ந்து இரவு விருந்து உண்பதற்கு ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளது

**2.12.2019** அன்று காலை **10.30** மணிக்கு **75** மாற்றுத்திறனாளி குழந்தைகளுக்கு தாம்பரம் வான் பாதுகாப்பு துறையினர் விமானத்தில் பயணிக்கும் அனுபவம் மற்றும் பாதுகாப்பு சேவைகள் பற்றி விவரிப்பார்கள். பல்வேறு மாவட்டங்களிலிருந்து வருகை புரியும் **260** மாற்றுத்திறனாளி குழந்தைகளுக்கு மாலை **3.00** மணி அளவில் சென்னை மெட்ரோ இரயில் மூலம் பயணம் செய்ய ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளது மற்றும் மாலை **6.30** மணிக்கு சத்தியம் சினிமாஸ் திரையரங்கில் சிறப்பு காட்சி (Frozen-2) ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

**3.12.2019** அன்று மாண்புமிகு சமூக நலம் மற்றும் சத்துணவுத்திட்ட துறை அமைச்சர் மருத்துவர்.V.சரோஜா அவர்களின் தலைமையில், **36** மாற்றுத்திறனாளி மாணவர்களுக்கு விமானத்தில் பயணிக்கும் அனுபவத்தை வழங்கும் பொருட்டு TruJet விமானத்தின் மூலம் சேலத்திலிருந்து சென்னைக்கு அழைத்து வர ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளது.

மேலும், 3.12.2019 அன்று அண்ணா பல்கலைகழக வளாகத்தில் உள்ள விவேகானந்தா அரங்கத்தில் காலை 9.00 மணியிலிருந்து கலைநிகழ்ச்சிகளும், மாலை 4.00 மணிக்கு மாநில விருதுகள், கலைநிகழ்ச்சிகளில் வெற்றி பெற்றவர்களுக்கு கேடயங்கள் மற்றும் நலத்திட்ட உதவிகள் வழங்கும் நிகழ்ச்சியும் மாண்புமிகு மீன்வளம், பணியாளர் மற்றும் நிர்வாக சீர்திருத்தத் துறை அமைச்சர் அவர்கள் திரு.D.ஜெயக்குமார் அவர்களும் மற்றும் மாண்புமிகு சமூகநலம் மற்றும் சத்துணவுத் திட்டத்துறை அமைச்சர் திருமதி. Dr. V. சரோஜா அவர்களும் வழங்கி விழாப் பேருரை ஆற்றவுள்ளார்கள்.

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9**